பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 10 2026 MONDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இங்கிலாந்து உடனான வர்த்தக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்தியா முடிவு செய்துள்ளது.

- தேர்தல் ஆணையத்திற்கு எதிராக காங்கிரஸ் தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

- பட்டாசு வெடிப்பதற்கு முழுமையாக தடை விதிக்க இயலாது என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

- பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு, அமெரிக்காவின் Robert Hall மற்றும் Michael Woodford -க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- தேசிய ஓப்பன் தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் Harshitha வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

இங்கிலாந்து உடனான வர்த்தக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்தியா முடிவு செய்துள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா - இங்கிலாந்து பொருளாதார வர்த்தக குழு கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஒப்பந்தம் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

விளையாட்டுத் துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

அஹமதாபாதில் பிரிக்ஸ் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பிரிக்ஸ் நாடுகளின் பாரம்பரிய விளையாட்டுகள் இதில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் பாரம்பரிய விளையாட்டுகளும் இதில் இடம்பெறுவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில், வடகிழக்கு மாநிலங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

மிஸோரமில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு வங்கியாளர்கள் மாநாடு நாளை நடைபெறவுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இம்மாநாடு வடகிழக்கு மாநிலங்களுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும் என்று அவர் தெரிவித்தார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி வருவதாகவும் திரு, ஜோதிராதித்ய சிந்தியா கூறினார்.

>>>>>><<<<<<

பட்டாசு வெடிப்பதற்கு தடை விதிப்பதற்கு பதிலாக, அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே நன்மை பயக்கும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. சூரியகாந்த் தலைமையிலான அமர்வு, மத உணர்வுகளை புண்படுத்தும் வகையில் எந்த உத்தரவையும் பிறப்பிக்க விரும்பவில்லை என்று தெரிவித்தது.

இருப்பினும் பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து சுற்றுச் சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இவ்வழக்கின் விசாரணை வரும் வியாழக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மனித உரிமைகள் ஆணையம், மக்களின் கண்ணியம் மற்றும் உரிமையை பாதுகாக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் திரு. ராமசுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு மனித உரிமைகள் ஆணையம் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. திரு. ராமசுப்பிரமணியன் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

தில்லியில் போராட்டங்கள் நடத்துவதற்கான இடமாக ஜந்தர் மந்தர் அறிவிக்கப்பட்டதை காவல்துறை விலக்கிக் கொண்டுள்ளது.

உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை ஏற்று, இந்த நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தில்லி காவல்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொதுஇடங்களை கண்டறிவதற்காக உள்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழு, மூன்று புதிய இடங்களை பரிந்துரைத்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ராம் லீலா மைதானம், Burari மைதானம், கிழக்கு தில்லியில் உள்ள CBD மைதானம் ஆகியவை போராட்டங்களுக்கான புதிய இடமாக கண்டறியப்பட்டுள்ளன.

இதற்கான அறிவிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் தில்லி காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வரும் நாடாக இந்தியா தொடர்ந்து திகழ்வதாக சர்வதேச எஃகு சங்கம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக அச்சங்கம் வெளியிட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையில், இந்தியாவின் எஃகு வர்த்தகம் வெகுவாக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவின் Robert Hall மற்றும் Michael Woodford -க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நுண்ணிய பொருளாதார அடிப்படையில் பொருளாதார நிலைத்தன்மைக்கான ஆய்வுக்காக இந்த விருது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது நேரடி அந்நிய முதலீட்டிற்கான கொள்கை.

(Voice Byte 74 செகண்ட்ஸ்)

*(இந்தியாவின் நேரடி அந்நிய முதலீட்டுக் கொள்கை கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக பெரிய அளவில் சீர்திருத்தங்களை கண்டு வருகிறது. பாதுகாப்பு, தொலைத்தொடர்பு, காப்பீடு, விண்வெளி போன்ற முக்கிய துறைகளில் நேரடி அந்நிய முதலீட்டுக்கான நெறிமுறைகள் தகர்த்தப்பட்டுள்ளன. பாதுகாப்புத் துறையில் நேரடி அந்நிய முதலீட்டிற்கான உச்சவரம்பு 74 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு, விண்வெளி மற்றும் காப்பீட்டு துறையில் இது 100 சதவீதம் அளவிற்கு உயர்த்தப்பட்டது. 2014ஆம் ஆண்டு தொடங்கி 2025ஆம் ஆண்டு வரை 748 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு*

*நேரடி அந்நிய முதலீடுகள் பெறப்பட்டன. முதலீடு செய்யும் நாடுகளின் எண்ணிக்கையும் 89-லிருந்து 118ஆக அதிகரித்தது. பிரதமர் திரு. நரேந்திர மோடி அண்மையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்துவருவதை சுட்டிக்காட்டி பேசினார். நேரடி அந்நிய முதலீட்டிற்கான நெறிமுறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொண்டது, பெரிய அளவில் பயன் தந்துள்ளதாக முதன்மை பொருளாதார ஆலோசகர் திரு. அனந்த நாராயணன் கூறினார். மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக முதலீட்டிற்கான உகந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. )*

>>>>>><<<<<<

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக காங்கிரஸ் தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் தோல்விக்கு காங்கிரஸ் தேர்தல் ஆணையத்தின் மீது பழி சுமத்துவதாக குறை கூறினார்.

தொலைநோக்குப் பார்வையற்ற தலைமை காரணமாகத் தான் காங்கிரஸ் தோல்வியை சந்தித்து வருவதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாட்டின் வளர்ச்சியில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு அக்கறையில்லை என்று மத்திய இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி, மக்கள் நலனுக்காக எவ்வித போராட்டங்களையும் நடத்தவில்லை என்று குறை கூறினார்.

ஜனநாயகத்தில் போராடுவதற்கு உரிமை உள்ளது என்ற போதிலும், தேர்தல் ஆணையத்திற்கு எதிராக தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து, எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபடுவது தவாறனது என்று திரு. ராம்தாஸ் அத்வாலே தெரிவித்தார்.

>>>>>><<<<<<

அரசியல் சாசன அமைப்புகளுக்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு இதுபோன்ற குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக கூறினார்.

உச்சநீதிமன்றம், தேர்தல் ஆணையம், ரிசர்வ் வங்கி போன்ற அமைப்புகளின் தன்னிச்சையான அதிகாரத்தை குலைக்கும் வகையில், எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் உள்ளதாக திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பாதுகாப்புப் படை வீரர்களின் நலனுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கூடுதல் முக்கியத்தும் அளித்து வருவதாக உத்ராகண்ட் முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி கூறியுள்ளார்.

ஹரித்வாரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் பாதுகாப்பு படை வீரர்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

தீவிரவாத தாக்குதலுக்கு ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகவும் திரு. புஷ்கர்சிங் தாமி கூறினார்.

>>>>>><<<<<<

தேசிய ஓப்பன் தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் Harshitha வெள்ளிப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் தடைஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் தமிழகம் இரண்டு தங்கம், 4 வெள்ளி, 7 வெண்கலப்பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் நான்காவது இடத்தை பிடித்தது

>>>>>><<<<<<

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Parul Choudhary மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 15-7, 15-7 என்ற செட்கணக்கில் பிரேஸிலின் Laura Roviezzo-வை வென்றார்.

>>>>>>END<<<<<<